**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

**CC.No.201/2017** **Date :20/04/2023**

**PW 5(சண்முகம் த/பெ.ராசு ) குறுக்கு விசாரணை தொடர்ச்சி** : சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**(எதிரி ஆஜர் )**

21.இந்த குற்ற பத்திரக்கையில் சண்முகம் மற்றும் பத்மா ஆகிய இருவரின் வரவு செலவு பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவை அனைத்தும் 1998 ம் ஆண்டிற்கானதுதான் என்றால் சரிதான். ஆனால் இந்த விசாரணை அலுவலருக்கு விசாரணை செய்ய 2001-2002 ம் ஆண்டிற்குரிய முறைகேடுகள் பற்றி அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நாங்கள் சண்முக சுந்தரம் என்ற நபரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளோம் என்றால் சரிதான். 1998 ம் ஆண்டிற்கான பேரேடு எதையும் கைப்பற்றி நாங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சண்முகம் அவரது வாக்குமூலத்தில் விசாரணை அதிகாரியிடம் வாக்குமூலம் கொடுத்தாக கூறவில்லை என்றால் சரிதான். நான் இரண்டு கடன்கள் பெற்றிருந்தேன் என்றும் அந்த கடன்களை திரும்ப செலுத்திவிட்டேன் என்றும், இந்த சாட்சி கூறியுள்ளார் என்றால் சரிதான். 1998 ம் ஆண்டிற்கு பின்பு நடந் தணிக்கையின்போது, ஏதாவது குறைபாடுகள் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்ததா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது.

CMW Copy

22. பத்மா என்பவரிடம் நாங்கள் விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். அவரை சாட்சியாகவும் இந்த வழக்கில் சேரக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கிற்கு எந்தவித முகாந்திரமும் இல்லாமல் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பவந்தமும் இல்லை என்றாலும் விசாரணை அலுவலர் அவருக்கு வழங்கப்பட்ட கால வரம்பை மீறி ஏதோ ஒரு காரணதட்டிற்காக எதிரியின் மீது இந்த குற்றதை சுமத்தியுள்ளார் என்றால் சரியல்ல. விசாரணை அலுவலர் ராமலிங்கமும் அவரது வாக்குமூலத்தில் சாட்சிகள் சண்முகசுந்தரம் மற்றும் பத்மா ஆகியோரை விசாரித்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No.I,
Perambalur.

Judiciary